இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 23-10-2024

# பயிற்று மொழி குறித்த குதர்க்கம்

“இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் தமிழ்நாடு நீங்கலாக 27 மாநிலங்களில் மும்மொழித் திட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது” என்ற அவதூறை ஆளுநர் ரவி சொல்லி இருக்கிறார். இதன் மூலமாக இந்திக்கு எதிராக தமிழ்நாடுதான் இருக்கிறது என்ற மாயத்தோற்றத்தை அவர் உருவாக்க முயற்சிக்கிறார்.

**தமிழ்நாட்டு நாளிதழ் ஒன்றில் தற்குறித்தனத்துடன் வெளியான கட்டுரை ஒன்றை எடுத்து அதனையே தனது உரையாக ஆளுநர் தயாரித்ததன் விளைவு தான், இந்த தவறான தகவல் ஆகும்.**

**27 மாநிலங்களில் மும்மொழித் திட்டம் இல்லை என்பதுதான் உண்மை.** இதனை முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் விளக்கமாக போட்டு உடைத்துவிட்டார்.

* பல இந்தி மாநிலங்களில் ஆங்கிலம் கற்றுத் தரப்படுவது இல்லை. ஆங்கில வகுப்புகளை நடத்துவது இல்லை.

* பல இந்தி மாநிலங்களில் இந்தி மொழிக்கு நெருக்கமான சமஸ்கிருதம், போஜ்புரி, பஞ்சாபி ஆகிய மொழிகளே கற்றுத் தரப்படுகிறது. தென்னிந்திய மொழிகள் கற்றுத்தரப்படுவது இல்லை.

– என்று சொல்லி இருக்கிறார் ப.சிதம்பரம் அவர்கள். இந்தி பேசும் மாநிலங்களில் பெரும்பாலும் ஒருமொழித் திட்டம்தான் இருக்கிறது. இதனை ஆளுநர் ரவி முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் இந்தியைத் திணிப்பதற்காகத் தான் மும்மொழித் திட்டம் என்ற முக்காடு போட்டு வருகிறார்கள். தமிழ்நாட்டு மாணவர்களுக்கு எதுவும் தெரியவில்லை என்றும், டாக்டர் படித்து வருபவர்களுக்கு எதுவும் தெரியவில்லை என்றும் இந்த மெத்தப்படித்த மேதாவி சொல்வதும் இதற்காகத்தான். இந்தியை மட்டும் கற்பிக்க வைத்து பீகாருக்கும் உ.பி.க்கும் தமிழ்நாட்டு இளைஞர்களைக் கொத்தடிமையாக அனுப்ப திட்டம் போடுகிறார் இந்த மாஜி ஐ.பி.எஸ். அதிகாரி.

**தமிழ்நாட்டுக்கு வந்தது முதல் தமிழ்நாட்டின் தட்பவெட்ப நிலைக்கு எதிராக வாழ நினைக்கிறார் ரவி. ‘தமிழ்நாடு’ என்பது இங்கு நாம் நிறைவேற்றி வைத்துள்ள சட்டம். அதனை மீறி, ‘தமிழகம்’ என்கிறார். தமிழ்த்தாய் வாழ்த்து பாட வேண்டும் என்பது நமது சட்டம். அதில் தித்திக்கும் திராவிட வரியை நீக்குகிறார். இருமொழிக் கொள்கை என்பது தமிழ்நாட்டின் சட்டம். அதற்கு எதிராகவே பேசுகிறார். இப்படி சட்டமீறலை நடத்தவே அவர் ஆளுநராக வந்து தொலைத்துள்ளார்.**

இருமொழிக் கொள்கை என்பது தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஆகும்.

தமிழும், ஆங்கிலமும்தான் நமது இருமொழிக் கொள்கை ஆகும். இந்திக்கு இடமில்லை என்பதுதான் அந்தச் சட்டம் ஆகும்.

சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தை 1968 சனவரி 23 அன்று முதல்வர் அண்ணா கூட்டினார். அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பது ...

**“தமிழும் மற்ற மொழிகளும் மைய அரசின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்; அதற்காக அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அந்தக் காலம் வரும் வரையில், ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தில் ஆட்சி மொழிகள் பற்றிய இயல் அந்த வகையில் திருத்தப்பட வேண்டும் என்று இந்தப் பேரவை வலியுறுத்துகிறது. ஆட்சி மொழிகள் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இந்தி பேசாத பகுதியினருக்குப் பளுவும், சங்கடத்தையும் தருவதுடன், மும்மொழித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்துவதன் மூலம், இந்தித் திணிப்பை நடத்தி, இறுதியில் இந்தியையே ஆட்சி மொழியாக ஆகிவிடுவது என்ற நோக்கத்துடன் அமைந்திருக்கிறது” என்று இப்பேரவை கருதுகிறது. மைய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்தப் பேரவை ஏற்க மறுக்கிறது.**

**மைய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல்படுத்த மறுக்கிற வகையிலும், தமிழக மக்களும், மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு மதிப்பளிக்கிற முறையிலும், தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கி விட இப்பேரவை தீர்மானிக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தில் இந்திக்கு தரப்பட்டுள்ள சிறப்பு நிலை நீக்கப்பட வேண்டும் என்றும்; இந்தியாவின் அனைத்து தேசிய மொழிகளுக்கும் சமநிலை வழங்கும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் பிற மொழிகளுக்குக் குறைவான நிலை தரப்பட்டுள்ளப் பிரிவுகளைத் திருத்த வேண்டும் என்றும் இப்பேரவை வலியுறுத்துகிறது.**

**அரசியலமைப்புச் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளின் வளர்ச்சிக்கும், மைய அரசு சமமான அளவில் நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் இப்பேரவை வலியுறுத்துகிறது”** என்று முழங்கினார் முதல்வர் அண்ணா!

இத்தகைய இருமொழிக் கொள்கை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இயங்கி வருகிறது. 3.1.1977 முதல் கல்வி என்பது பொது அதிகாரப் பட்டியலுக்குப் போனதால் சில சிக்கல்கள் ஏற்பட்டது.

மத்திய பள்ளிகள், சி.பி.எஸ்.சி. பள்ளிகள் போன்றவற்றில் இந்தி கற்பிக்கப்படுவதற்கு தமிழ்நாடு தடை போடவில்லை.விரும்பி கற்றுக் கொள்பவர்களுக்கு எந்தத் தடையாகவும் தமிழ்நாடு அரசோ, தமிழ் உணர்வாளர்களோ, திராவிட இயக்கமோ இல்லை. இந்தித் திணிப்பைத்தான் எதிர்க்கிறோமே தவிர, இந்தி மொழியை அல்ல.

இந்தி இருக்கக் கூடாது, அந்த மொழியை அழிக்க வேண்டும் என்று நாம் எந்தப் படையெடுப்பையும் நடத்தவில்லை. அது அதன் மண்ணில் வாழட்டும். செழிக்கட்டும். அம்மக்கள் அம்மொழியை வளர்க்கட்டும். அதன் மூலமாக வாழட்டும் என்ற பெருந்தன்மை நமக்கு இருக்கிறது. ஆனால் பீகாரில் இருந்து படையெடுத்து வந்துவிட்டு, ‘தமிழ் மக்கள் இனவாதிகள்’ என்று சொல்லும் அருகதை எவருக்கும் வழங்கப்படவில்லை.

தாய்மொழியாகிய தமிழ், உலகத்துக்கான இணைப்பு மொழியாக ஆங்கிலம் என இரு மொழிக் கொள்கை மட்டுமே தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகிறது. 2006 ஆம் ஆண்டின் தமிழ்நாடு (தமிழ் மொழி கற்கும்) சட்டத்தின்படி ஒவ்வொரு மாணவரும், பத்தாம் வகுப்பு வரை தமிழ் மொழியை கட்டாயப் பாடமாக கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனினும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது என தமிழை தாய் மொழியாகக் கொள்ளாத மாணவர்களும் தமிழ் மொழியுடன் சேர்த்து அவர்தம் தாய் மொழியையும் விருப்பப் பாடமாக படித்து தேர்வு எழுதும் முறை பல ஆண்டுகளாக இருந்துவருகிறது. எனவே, **இங்கு மும்மொழித் திட்டம் என்ற பெயரால் இந்தியையும், ஆன்மிக மொழி என்ற பெயரால் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் எந்த முயற்சியையும் தமிழ்நாடு எதிர்க்கும். திணிப்பவரை எதிர்க்கும். எதிர்ப்பவரையும் எதிர்க்கும்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாமக்கல் அரசு விருந்தினர் மாளிகையில் நேற்று (22.10.2024) கடந்த மாதம் வடமாநில ஏ.டி.எம். கொள்ளை கும்பலை பிடித்த மாவட்ட கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்ணன், உள்ளிட்ட நாமக்கல் மாவட்ட காவல் துறையினரைப் பாராட்டி கேடயம் வழங்கி, குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டார். உடன், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) செள. டேவிட்சன் தேவாசிர்வாதம், மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### ஏ.டி.எம். கொள்ளைக் கும்பலை மடக்கிப் பிடித்த

# நாமக்கல் காவல் துறையினருக்கு முதல்வர் பாராட்டு!

நாமக்கல், அக்.23-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வட மாநில ஏ.டி.எம். கொள்ளை கும்பலை மடக்கிப் பிடித்த நாமக்கல் மாவட்ட காவல் துறையினருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) நாமக்கல் மாவட்டத்திற்கு அரசு விழாவில் பங்கேற்பதற்காக வருகை புரிந்துள்ளார்.

அப்போது, அரசு விருந்தினர் மாளிகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாவட்ட கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்ணன், உள்ளிட்ட வடமாநில ஏ.டி.எம். கொள்ளை கும்பலை மடக்கிப் பிடித்த நாமக்கல் மாவட்ட காவல் துறையினரைப் பாராட்டி வாழ்த்து தெரிவித்து, குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

கடந்த மாதம் கேரள மாநிலம் திருச்சூரில் அடுத்தடுத்து 3 ஏ.டி.எம்.களில் வடமாநிலத்தை சேர்ந்த கொள்ளை கும்பல் கொள்ளையடித்தனர். ஏ.டி.எம்.களில் கொள்ளையடித்துவிட்டு கொள்ளை கும்பல் ராஜஸ்தான் பதிவெண் கொண்ட கண்டெய்னர் லாரியில் தப்பிச்செல்வதாக நாமக்கல் மாவட்ட போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் குமாரபாளையம் அருகே போலீசார், கேரளாவில் இருந்து வந்த கண்டெய்னர் லாரியை போலீசார் நிறுத்தியும் நிற்காமல் சென்றது. இதையடுத்து விரட்டி சென்ற போலீசார் கண்டெய்னர் லாரியை மடக்கி கொள்ளை கும்பலை பிடித்தனர்.

இந்த சம்பவத்தை பாராட்டி கேரள தலைமை காவல் துறை இயக்குநர் டாக்டர். ஷேக் தர்வேஷ் சாஹிப், தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், நாமக்கல் மாவட்ட காவல் துறையினர் துரிதமாக செயல்பட்டு, சம்பவம் நடைபெற்று 6 மணி நேரத்திற்குள் கொள்ளையர்களை பிடித்தது பாராட்டத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தின் போது, ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்றிய நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், காவல் துணை கண்காணிப்பாளர்கள் இமையவர்மன், முருகேசன், ராஜா, காவல் ஆய்வாளர்கள் தவமணி, ரங்கசாமி, காவல்துணை ஆய்வாளர்கள் என மொத்தம் 23 காவல்துறையினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) டேவிட்சன் தேவாசிர்வாதம் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### சென்னையில் வசிக்கும்

# பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம்!

## சமூகநல ஆணையர் அறிவிப்பு!

சென்னை, அக்.23-

சென்னையில் வசிக்கும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம் கொண்டுவரப்படும் என சமூக நலத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு அரசு, பெண்கள் நலன், பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தி வருகின்றது. அவற்றோடு, பெண்களின் நலனை உறுதி செய்யும் விதமாக விடியல் பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, தோழி விடுதிகள், கைம் பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கியது.

புதுமைப்பெண் திட்டம் போன்ற பல்வேறு புதிய மகளிர் நலத் திட்டங்களை செயல்படுத்தி, பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்துள்ளது.

பெண்களின் பாதுகாப்பில் தமிழ் நாடு சிறந்து விளங்குகின்றது, அதனை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், ஒரு புதிய முன்னெடுப்பாக ‘இளஞ்சிவப்பு ஆட்டோக்களை’ தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக பயணிக்க, பெண் ஓட்டுநர்கள் மூலம் 250 ஆட்டோக்கள் சென்னை மாநகரில் இயக்கப்பட உள்ளன.

அவசர காலங்களில் புகார் பெறப்பட்டவுடன், காவல் துறையின் மூலம் விரைவான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு ஒவ்வொரு இளஞ்சிவப்பு ஆட்டோவிலும், பெண்களின் பாதுகாப்பிற்காக காவல்துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்டிருக்கும்.

பெண்கள் சுய தொழிலில் சிறந்து விளங்க ஊக்கப்படுத்தவும், ஓட்டுநர் உரிமம் பெற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இத்திட்டம் வழிவகை செய்யும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தேவையான தகுதிகள்:

i. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

ii. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

iii. 25 வயது முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.

iv. 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

iv. ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

v. சென்னையில் குடியிருக்க வேண்டும்

இதற்கென, சென்னையில் உள்ள 250 பெண்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசு CNG/Hybrid ஆட்டோ வாங்க மானியமாக வழங்கும். ஆட்டோ வாங்க தேவைப்படும் மீதி பணத்திற்காக வங்கிகளுடன் இணைக்கப்படும்.

சென்னையில் உள்ள தகுதியான பெண் ஓட்டுநர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை சென்னை மாவட்ட சமூக நல அலுவலருக்கு, 8வது தளம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை - 600 001 என்ற முகவரிக்கு 23.11.2024 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

இவ்வாறு சமூகநல ஆணையர் அறிவித்துள்ளார்.

### புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடியில்

# 300 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, அக். 23 -

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 21.10.2024 அன்று வழங்கினார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளக்கிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல் படுத்தி வருகிறார். அதனடிப்படையில் இல்லம் தேடி கல்வித் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 300 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

அதன்படி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கறம்பக்குடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 100 மாணவர்களுக்கும், கறம்பக்குடி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 200 மாணவிகளுக்கும், என ஆகமொத்தம் 300 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் வழங்கப்படும் இந்த விலையில்லா மிதிவண்டிகளை பெற்றுக்கொண்ட மாணாக்கர்கள் அனைவரும் இதனை நாள்தோறும் பள்ளிக்குச் சென்று வருவதற்கு பயன்படுத்தி தங்களது உடல்நலத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை, அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் (பொ) க.ஜெயந்தி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் மாலா ராஜேந்திரதுரை (கறம்பக்குடி), மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), பள்ளிக்கல்வி துணை ஆய்வாளர் மு. இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (22.10.2024) முகாம் அலுவலகத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், வனத்துறை அமைச்சருமான முனைவர் க.பொன்முடி நேரில் சந்தித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.10.2024 அன்று சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் வெளியிட உள்ள, தான் எழுதிய ‘திராவிட இயக்கமும், கருப்பர் இயக்கமும்’ என்ற நூல் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.